# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

**19.08.2022**

**WEBSITE LINK** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**FACEBOOK LINK** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## முக்கிய தினங்கள்

1. 19.08.2022
    - **உலக புகைப்பட தினம்**
    - 2022 உலக புகைப்பட தினத்தின் கருத்துரு **"லென்ஸ் மூலம் தொற்றுநோய் பூட்டுதல்"** என்பதாகும்.

## மாநில செய்திகள்

1. **கருடா செயலி**
    - வாக்காளர் பட்டியலுடன் ஆதார் எண்ணை இணைக்கும் பணிகளை வாக்குச்சாவடி அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று மேற்கொண்டு வருகின்றனர்.
    - இதற்காக அவர்கள் தங்களது கைபேசியில் **கருடா என்ற செயலியை** பயன்படுத்துகிறார்கள்.
    - இந்த செயலி மூலம் வாக்காளர் பட்டியலுடன் ஆதார் எண்ணை இணைக்கலாம்.
    - ஆனால் இந்த **செயலி வசதியை வாக்குச்சாவடி அலுவலர்கள்** மட்டுமே பயன்படுத்த முடியும்.
    - தமிழ்நாடு முழுவதும் கடந்த17 ஆம் தேதி வரை வாக்காளர் பட்டியலுடன் ஆதார் எண்ணை 37 லட்சத்து 81 ஆயிரத்து 498 பேர் இணைத்துள்ளனர்.
    - இது மொத்த வாக்காளர்களுடன் ஒப்பிடும்போது 6.08 சதவீதம்.

2. **ஆன்லைன் ரம்மிக்கு தடை**
    - ஆன்லைன் ரம்மியை தடை செய்வது தொடர்பாக அதிகாரிகளுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார்.
    - ஆன்லைன் விளையாட்டுகள் தொடர்பாக புதிய அவசர சட்டம் இயற்றுவதற்காக தமிழக அரசுக்கு பரிந்துரைகள் வழங்க சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி **கே.சந்துரு** தலைமையில் ஒரு குழு அமைத்தது.
    - அக்குழுவின் அறிக்கை அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.
    - இதனிடையில் ஆன்லைன் விளையாட்டுகளை தடை செய்வது, ஒழுங்குபடுத்துவது தொடர்பாக கருத்துக்களை தெரிவிக்கலாம் என தமிழக அரசு கேட்டுக் கொண்டது.

3. **காலமானார் தமிழறிஞர் நெல்லை கண்ணன்**
    - தமிழறிஞர், இலக்கிய பேச்சாளர், பட்டிமன்ற பேச்சாளர், நடுவர், ஆன்மீக சொற்பொழிவாளர், அரசியல்வாதி என பன்முகத்திறமை கொண்டவர்.
    - குறுக்குத்துறை ரகசியங்கள்1 , குறுக்குத்துறை ரகசியங்கள்2 , ஆகிய நூல்களையும் வடிவுடை காந்திமதியே, காதல் செய்யாதவர்கள் கல்லெறியுங்கள், திக்கணைத்தும் சடைவீசி, பழம் பாடல் உள்ளிட்ட கவிதை நூல்களையும் எழுதியுள்ளார் .
    - இவருக்கு 2022 ஆம் ஆண்டுக்கான தமிழக அரசின் **இளங்கோவடிகள் விருது** வழங்கப்பட்டது.

4. **65 ஆவது காமன்வெல்த் நாடாளுமன்ற மாநாடு**
    - கனடா நாட்டின் **ஹாலிக்பேக்ஸ்** நகரில் 65 ஆவது காமன்வெல்த் நாடாளுமன்ற மாநாடு வரும் ஆகஸ்ட் 22 முதல் 26 வரை நடைபெற உள்ளது.

- இந்த மாநாட்டில் தமிழகத்தின் பிரதிநிதியாக பேரவை தலைவர் **மு.அப்பாவு** கலந்து கொள்கிறார்.

## மத்திய செய்திகள்

### 1. 'ஸ்வராஜ்'

- நாட்டின் 75 ஆம் ஆண்டு சுதந்திர தின நிறைவு கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக அதிகம் அறியப்படாத சுதந்திரப் போராட்ட வீரர்களின் முழுமையான வரலாற்றை **'ஸ்வராஜ்'** என்ற தலைப்பில் 75 வாரங்களுக்கு தொலைக்காட்சி தொடராக ஒளிபரப்ப தூர்தர்ஷன் திட்டமிட்டுள்ளது.

### 2. பாஸ் ஸ்கேம்

- தமிழகத்தில் புதிதாக உருவாகியுள்ள பாஸ் ஸ்கேம் என்ற மோசடியில் பொதுமக்கள் சிக்காமல் எச்சரிக்கையுடன் இருக்கும்படி தமிழக காவல்துறை தலைமை இயக்குனர் சி.சைலேந்திரபாபு தெரிவித்துள்ளார்.
- ஆன்லைனில் புதிய வகை மோசடி தற்போது நடைபெறுகிறது.
- நீங்கள் வேலை செய்யும் இடத்தில் உள்ள பெரிய அதிகாரி அல்லது மாவட்ட ஆட்சியர், டிஜிபி போன்றவர்கள் கைபேசி மூலமாக உங்களிடம் பேசுவது போன்று பேசி
  - நான் ஆலோசனை கூட்டத்தில் இருக்கிறேன்.
  - எனக்கு அவசரமாக அமேசான் பரிசு கூப்பன் தேவைப்படுகிறது.
  - ஒரு கூப்பன் விலை ரூபாய்10 , 000எனக்கு 10 கூப்பன் வாங்கி அனுப்புங்கள் நான் அப்புறம் பணம் கொடுத்து விடுகிறேன் என்று தெரிவிப்பார்.
- **காவலன் செயலியை** உங்களுடைய கைபேசியில் பதிவிறக்கம் செய்து புகாரை பதிவு செய்யுங்கள்.
- மேலும் இதில் **ஆன்லைன் மோசடி** என்பதை தொட்டாலே **1930 என்ற இலவச தொலைபேசி எண்ணுக்கு** அழைப்பு சென்றுவிடும்.
- இதன் மூலம் உங்களுடைய பணத்தை நீங்கள் காப்பாற்றிக் கொள்ளலாம்.

### 3. இரு அடுக்கு குளிர்சாதன மின்சார பேருந்து

- நாட்டின் முதல் இரு அடுக்கு குளிர்சாதன மின்சார பேருந்து மும்பையில் **மத்திய அமைச்சர் நிதின் கட்கரி** அறிமுகப்படுத்தினார்.
- நாட்டில் ஏற்படும் காற்று மாசில் **35 சதவீதம்** டீசல் மற்றும் பெட்ரோல் பயன்பாட்டால் ஏற்படுகிறது.
- அதன் காரணமாகத்தான் இறக்குமதியை குறைத்து காற்று மாசை ஏற்படுத்தாத முழுவதும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட குறைந்த விலையிலான மாற்று எரிபொருள் நமக்கு அவசியமாகிறது என்றும் அவர் கூறினார்.
- **மும்பையில்** நடைபெற்ற நிகழ்ச்சியில் மின்சாரத்தில் இயங்கக்கூடிய நாட்டின் முதல் இரட்டை அடிக்கு குளிர்சாதன பேருந்து சேவையை மத்திய அமைச்சர் நிதின் கட்கரி தொடக்கி வைத்தார்.
- வாகனங்களுக்கு மின்சாரம், எத்தனால், மெத்தனால், பயோ-டீசல், பயோ-சிஎன்ஜி (இயற்கைஎரிவாயு), பயோ-எல்என்ஜி (திரவ இயற்கை எரிவாயு), ஹைட்ரஜன் போன்ற மாற்று எதிர் பொருள் பயன்பாட்டை தொடங்க வேண்டிய நேரம் இது.

### 4. நேதாஜியின் அஸ்தியில் மரபணு சோதனை

- ஜப்பான் தலைநகர் **டோக்கியோவில் உள்ள ரெங்கோஜி** ஆலய அஸ்தியை மரபணு சோதனைக்கு உட்படுத்துமாறு இந்தியா, ஜப்பான் அரசுகளிடம்

கோரவுள்ளதாக நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் மகளான அனிதா போஸ் தெரிவித்துள்ளார்.

- **அதிநவீன மரபணு சோதனையை** செய்ய நவீன தொழில்நுட்பம் வழிவகுக்கிறது.
- கடந்த 1945 இல் நேதாஜி இறந்தாரா? இல்லையா? என்று இன்னமும் சந்தேகப்பவர்களுக்கு ரெங்கோஜி ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது நேதாஜியின் அஸ்தி தான் என்பதை நிரூபிக்க இது ஒரு வாய்ப்பாகும் என்றார்.

### 5. அன்னை நாயகி

- ரஷ்யாவில் சரிந்து வரும் மக்கள் தொகையை மீண்டும் அதிகரிக்க பத்து குழந்தைகளுக்கு மேல் பெற்றுக்கொள்ளும் பெண்களுக்கு **10 லட்சம் ரூபில்** (ரூபாய்13 . 30லட்சம்) வெகுமதியுடன் கூடிய **'அன்னை நாயகி'** என்ற விருதை அளிக்க இருப்பதாக **அதிபர் விளாதிமீர்** அறிவித்துள்ளார்.
- இரண்டாம் உலகப் போரின்போது ஸ்டாலின் அறிமுகப்படுத்திய இந்த விருது தற்போது மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### 6. பெயர் மாற்றம் பெற்றன குரங்கு அம்மை ரகங்கள்

- குரங்கு அம்மை தீநுண்மியின் துணை ரகங்களுக்கு **'காங்கோ படுகை, தென்ஆப்பிரிக்க கிளேட்'** என்றிருந்த பெயர்களை 'கிளேட் 1, கிளேட் 2' என உலக சுகாதார அமைப்பு மாற்றியுள்ளது.

## விளையாட்டு செய்திகள்

### 1. பாரா துப்பாக்கி சுடுதல்: இந்தியாவுக்கு மூன்று பதக்கங்கள்

- தென் கொரியாவில் நடைபெறும் பாரா உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் முதல் நாளில் இந்தியா **1 தங்கம், 1வெள்ளி, 1வெண்கலம்** என மூன்று பதக்கங்கள் வென்றன.
- இதில் கலப்பு பி 325 மீட்டர் பிஸ்டல் எஸ்ஹெச் 1 பிரிவில் இந்தியாவின் **ராகுல் ஜாக்கர்** 20 புள்ளிகள் உடன் தங்கம் வெல்ல அதே பிரிவில் இந்திய வீராங்கனை **பூஜா அகர்வால்** 14 புள்ளிகளுடன் வெண்கல பதக்கம் பெற்றார்.